அசல் வழக்கு எண். 58/2020 வா.சா.3 கா்மேகம் த/பெ வெங்கடாசலம்

**10.06.2024 - 4 மற்றும் 5ம் பிரதிவாதித்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர், ஐக்பந்தி மற்றும் பரப்பளவு தெரியுமா என்றால் ஐக்பந்தி சர்வே நெம்பர் தெரியாது. ஆனால் 2 ஏக்கர் அளவு உள்ள சொத்தாகும்.

2. 4ம் பிரதிவாதி இளங்கோவை எனக்கு தெரியும். வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி பூபதி 4ம் பிரதிவாதி இளங்கோவிற்கு விற்றுவிட்ட விவரம் எனக்கு தெரியும். அதன்பிறகு 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்திக்கு விற்றுவிட்டார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் அதை பற்றி சொல்லிக் கொண்டார்கள்.

3. 5ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய பிறகு வழக்கு சொத்தினை அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அனைவரும் கூட்டு குடும்பமாக தான் வழக்கு சொத்தினை அனுபவித்து வருகிறார்கள்.

4. வாதி என் உறவினர் பெண்ணை சிறுவயதில் திருமணம் செய்து கொண்டு தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி சென்னையில் தனியாக வசித்து வருகிறார். ஆனால் ஊருக்கு வந்து செல்வார். வாதியின் பெற்றோர் தனியாக தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அனைவரும் கூட்டாக தான் வசித்து வருகிறார்கள். வாதி மட்டும் தான் தனியாக வசித்து வருகிறார். சாட்சியம் அளிக்க வாதி அழைத்ததன்பேரில் வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை.

5. வாதி திருமணம் ஆன பிறகு அவரது பெற்றோரை கவனிப்பதில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி பெற்றோர் வீட்டுக்கு செல்வார். ஆனால் அவர்கள்தான் வாதியை வீட்டில் சேர்ப்பதில்லை. அவ்வாறு வாதி அவரது பெற்றோர் வீட்டுக்கு சென்றபோது அவரை வீட்டில் சேர்க்கவில்லை என்று என்னிடம் வாதி சொன்னார். வாதியின் பெற்றோர்களை 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி தான் தற்போது கவனித்து வருகிறார் என்றால் சரிதான்.

6. வழக்கு சொத்தில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் வழக்கு சொதததை 5ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்ற நோக்குடன் தான் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி என் உறவினர் பெண்ணை திருமணம் செய்துள்ளதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.